# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 81 பிரசோற்பத்தி மாசி 04 (16 02 1992) ஞாயிறு


## ஊரடங்குச் சட்டம் மேலும் நீடிக்கப்படலாம்

குடாநாட்டில் அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டம் செவ்வாய்க்கிழமைக்குப் பின்னர் மேலும் நீடிக்கப்படலாம் என பி. பி. ஸி நேற்றிரவு தெரிவித்தது. குடா நாட்டில் இராணுவத்தின் தாக்குதல் புதிதாக ஆரம்பிக்கும் நடவடிக்கையாகவே ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டதாக இராணுவ அதிகாரிகள் கூறியதாகவும் பி. பி. ஸி மேலும் தெரிவித்தது.

# ஜே. வி. பியின் நடவடிக்கை மீண்டும் உருவாகி வருகிறது

## ஜனாதிபதி பிரேமதாஸ தகவல்

ஜே. வி. பி. நடவடிக்கை மீண்டும் நாட்டில் தோன்றும் நிலை உருவாகிவருவதாக ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று கம்ஹாவில நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இதற்கு நாம் இடமளிக்கக் கூடாது எனத் தெரிவித்த அவர் அன்று நாட்டில் இருந்த நிலைமைகளை ஜே வி. பியினர் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி செயற்பட்டனர் என்றார்

ஜே வி. பி.யினரின் முயற்சிகளை முறியடிக்க அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் ஜனாதிபதி சொன்னார்

விடுதலைப்புலிகளை தான் மீண்டும் ஜனநாயக வழிக்கு அழைப்பதாகவும் கூறினார்

## ஜே. வி. பி. இயக்கத்தைப் பலப்படுத்த ஏற்பாடுகள்

ஜே. வி. பி. இயக்கத்தை புனரமைத்து அதன் செயல்களை விஸ்தரிக்கப்போவதாக அதன் தற்போதைய தலைவரான சோமதாஸ அமரசிங்க காமினி வசந்த வந்த போன என்பவருக்கு எழுதிய கடிதம் பிரான்ஸ் பொலிஸாருக்கு கிடைத்துள்ளதாக லேக் ஹவுஸ் பத்திரிகை தெரிவிக்கிறது.

ஒரு பலமான அரசியல் நடவடிக்கையில் ஜே. வி. பி. ஈடுபடப்போவதாக சோமதாஸ அமரசிங்க அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் யுக்திகளைக் கைக்கொண்டு இனிமேல் ஜே. வி. பியும் தமது நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் எனவும் அவர் மேலும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

### தற்போதைய ஜே. வி. பி. தலைவர் கோரிக்கை

## றோகணவின் மனைவியை சர்வதேசசெஞ்சிலுவையிடம் ஒப்படைக்கவும்

மறைந்த ஜே வி.பி இயக்கத் தலைவர் றோகண விஜேவீரவின் மனைவியையும் பிள்ளைகளையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் அரசு ஒப்படைக்க வேண்டும் என அதன் தற்போதைய தலைவர் சோமவன்ஸ அமரசிங்க பி பி ஸிக்கு தொலைபேசியில் தெரிவித்தார்

றோகணாவின் மனைவிக்கு இராணுவமுகாமில் இருப்பதே விருப்பம் என ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் முன்னர் தெரிவித்திருந்தார்

இதனையடுத்து சோமவன்ஸ அமரசிங்க இவ்வாறு பி, பி ஸிக்கு தெரிவித்திருந்தார்,

றோகணவின் மனைவி இவ்வாறு சொல்லியிருக்க மாட்டார் எனவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மூலம் வெளிநாடு ஒன்றுக்கு திருமதி விஜேவீராவை அனுப்பி வைத்தால் தாம் பொறுப்பேற்போம் எனவும் அவர் மேலும் சொன்னார்.

## பலாலியில் இருந்து ஷெல் தாக்கு தொண்டமனாறில் ஒருவர் பலி

நேற்று அதிகாலை 4 30 மணியளவில் பலாலி இராணுவமுகாமில் இருந்து தொண்டமனாறு, வளலாய் பகுதிகளை நோக்கி பரவலாக ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

இதனால் தொண்டமனாறில் மீன்பிடித்துக்கொண்டிருந்த நாகலிங்கம் கதிராமு அல்லது செல்வானந்தம் (56) என்னும் குடும்பஸ்தர் தலை சிதறிய நிலையில் மரணமானார். மேலும்பல ஷெல்கள் தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயப்பகுதிகளில் விழுந்து வெடித்தன.

இவ் இடங்களில் சன நடமாட்டங்கள் இன்மையால் உயிர் இழப்புக்கள் தவிர்க்கப்பட்டன. 09

## தமிழர்களின் குடிசைகள் படையினரால் எரிப்பு

அம்பாறையில் உள்ள குடிமியா மலைப் பகுதியை சுற்றி வளைத்த படையினர் அங்கிருந்த தமிழர்களின் பன்னிரு குடிசைகளை தீ வைத்துக் கொளுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அங்கிருந்து தப்பி ஓடிய தமிழர்கள் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பொதுமக்கள் இறுதி அஞ்சலி

பலாலி கட்டுவன் இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை முன்னேறிய படையுடனான நேரடி மோதலில் வீரச்சாவை எய்திய காரைநகரைச் சேர்ந்த வீரவேங்கையான முத்தரசன் (சுந்தர

—04 ஆம் பக்கம் பார்க்க

## கட்டுவன் பகுதியில் அதிகாலை மோதல்

நேற்று அதிகாலை பலாலி - கட்டுவன் முகாம்பகுதியில் நிலைகொண்டிருக்கும் படையினர் கடும் ஷெல்தாக்குதல்களையும், துப்பாக்கி பிரயோகத்தினையும் மேற்கொண்டு முன்னேற முயற்சித்தனர்.

விடுதலைப்புலிகள் படையினரை முன்னேற விடாமல் கடும்தாக்குதல்களை மேற்கொண்டதில் பல படையினர் உயிரிழந்ததாகவும் பலர் காயமடைந்ததாகவும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (47 - 07 - 06)

## நள்ளிரவு முதல் அதிகாலை வரை ஷெல் தாக்குதல்

நேற்றுமுன்தினம் நள்ளிரவு தொடக்கம் அதிகாலை வரையில் பலாலி இராணுவ முகாமிலிருந்து படையினர் அகோர ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டபடியிருந்தனர்.

வலிவடக்குப் பகுதியான கட்டுவன், வசாவிளான், குப்பிளான், ஏழாலைப் பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் படையினர் பலத்த துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

இதனால் இப்பகுதிகளில் பல வீடுகள், கட்டிடங்கள், தோட்ட நிலங்கள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (07, 47, 06)

## வடமராட்சி கிழக்கில் கடற்படை தாக்குதல்

புல்லாவெளி, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு பகுதிகளில் நேற்றுக்காலை பீரங்கிப் படகுகள் கரையை நோக்கி வந்து பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொண்டன

இதனையடுத்து விடுதலைப் புலிகளும் பதில் தாக்குதல் தொடுத்ததாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர். 72

## வாசகர் கணிப்பு முடிவுகள்

வாசகப் பெரு மக்களே!

ஜனவரி மாத முரசொலி இதழ்கள் பற்றிய வாசகர் கருத்துக் கணிப்பில் பல வாசகர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றியிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

வாசகர் கருத்துக் கணிப்பு முடிவுகள் வருமாறு-

★ திரு வே சிவநேசன் தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

★ திரு பி. ஜெயவிந்தன் 140, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

★ திரு. சு. விவேகானந்தன் (ஆசிரியர்) கந்தவேள் தமிழ்க்கலவன் பாடசாலை, இருபாலை, கோப்பாய்.

இவர்கள் முறையே 30, 20, 10 நாள்களுக்குரிய முரசொலிப் பிரதிகளை இலவசமாகப் பெறுகின்றார்கள் குறித்த வாசகர்கள் எமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் முரசொலி விற்பனையாளரின் முகவரியினைத் தெரிவிக்கும்படி வேண்டுகின்றோம்.

கருத்துக் கணிப்பில் பங்குபற்றிய அனைத்து வாசகர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- நிர்வாகம்

# விவசாயத் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கோரிக்கை

யாழ். அரசாங்க அதிபர் ஊடாக அத்தியாவசிய சேவை ஆணையாளருக்குக் கோப்பாய் மக்கள் நலன்காக்கும் பிரிவு அனுப்பியுள்ள மகஜரில் விவசாயத்துக்குத் தேவையான எரிபொருள், நீர்இறைக்கும் இயந்திரங்களின் உதிரிப்பாகங்கள், உரம் போன்றவற்றைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கும் வண்ணம் கோரியுள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையில் இங்கு நிலவும் குறைபாடுகளை எடுத்துக்காட்டும் அம் மகஜரில் விவசாயிகள் அனுபவிக்கும் கஷ்டங்களையும், எடுத்துரைத்துக் குறிப்பிடுவதோடு இச் சங்கத்தினால் எடுத்துவரும் பல அபிவிருத்தித் திட்டங்களையும் இந்த மகஜரில் விவரித்துள்ளனர்

மேற்படி மகஜர் யாழ் அரசாங்க அதிபரால் அத்தியாவசிய சேவை ஆணையாளரிடம் நேரடியாகக் கையளிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (06)

## அறிவியல் கலந்துரையாடல்

''யாழ்.குடா நாட்டின் நீர் வளங்கள் சூழல் பேணுதல்'' பற்றிய கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில் பொருள் நூதனசாலை மண்டபத்தில் பேராசிரியர் வீ கே கணேசலிங்கம் தலைமையில் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலைத் தமிழீழ ஆய்வு நிறுவனம் ஒழுங்கு செய்துள்ளது. (11)

★ மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில்

# 'மிருகத்தனமான' ராக்கிங்

# 21 மாணவர் இடைநிறுத்தம்

மருதானை தொழில் நுட்பக்கல்லூரியிலிருந்து 21 சிரேஷ்ட மாணவர்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

புதிய மாணவர்களை ராக்கிங் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்வித் திணைக்கள சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

800 மாணவர்களுக்கான விரிவுரைகள் காலவரையறையின்றி நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

மேற்படி மாணவர்கள் மேற்கொண்டது மிருகத்தனமான ராக்கிங்' என்றும் வர்ணிக்கப்பட்டது

# செய்தி உலகம்

## ரஷ்யா

சோவியத் ரஷ்யாவைச் சுற்றி, பின்லாந்து, நோர்வே, போலந்து, செக்கோசிலவாக்கியா, ஹங்கேரி, ருமேனியா, துருக்கி, ஈரான், ஆப்கானிஸ்தான், மங்கோலியா, சீனா, கொரியா, ஜப்பான் ஆகிய பதின்மூன்று நாடுகள் இருக்கின்றன. இதனால் உலகிலேயே அதிகமான நாடுகளை எல்லையாகக் கொண்ட நாடு என்ற பெருமை இருந்து வந்தது. அனால் சமீபத்தில் சோவியத் ரஷ்யா 15 துண்டுகளாகப் பிரிந்ததினால் அந்தப் பெருமை அற்றுப்போய்விட்டது.

## அமெரிக்கா

சமீபத்தில் அமெரிக்காவில் நடந்த ஓர் ஏலவிற்பனையின் போது பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்ததாகக் கருதப்படும் 12 அடி நீளமும், 8 அடி உயரமும் கொண்ட ஒரு பிராணியின் உருக்குலையாத எலும்புக்கூட்டை வேல்ஸ் நாட்டைச் சேர்ந்த டாக்டர் பாஸெட் வாங்கியுள்ளார். இதற்கு இவர் செலுத்திய தொகை ஒரு இலட்சத்து 70 ஆயிரம் டொலர்கள். இலங்கை நாணய மதி பின்படி 68 இல சம் ரூபா. 367 எலும்புகளை உள்ளடக்கிய இந்த எலும்புக் கூட்டிற்கு 'டினோசர்' என்று பெயர் சூட்டப்பட்டு வேல்ஸில் உள்ள அரும் பொருள் காட்சியகத்தில் தற்பொழுது வைக்கப் பட்டிருக்கிறது.

## இந்தியா

இந்தியாவில் இறந்தவர்களின் உடல்களை எரிப்பதற்கு மட்டும் 20 இலட்சம் தொன் விறகுக் கட்டைகள் தேவைபபடுகின்றன. அதாவது தினம் ஒன்றுக்கு 5500 தொன் விறகுக் கட்டைகள் பயன்படுத்தப்படுகின்றன. எரிப்பதற்கு விறகுகளைப் பாவிப்பதற்குப் பதிலாக மின்சாரத்தைப் பாவிக்கலாமே என்று ஒரு சிலர் கூறிய யோசனையைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டாலும் பழமை விரும்பிகள் எதிர்ப்புத் தெரிவடபார்களே என்ற அச்சத்தினால் நடைமுறைப் படுத்த மத்திய அரசு தயக்கம் காட்டுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

## இத்தாலி

உலகின் முதல் அகராதி (DICTIONARY) கி பி 1612 ஆம் ஆண்டு இத்தாலிய மொழியில் உருவாக்கபபட்டது

தமிழ் இலக்கிய அகராதியும் கி, பி 16 ஆம் நூற்றாண்டிலேயே தொகுக்கும் முயற்சி மேற்கொள்ளபபட்டது. தமிழ்ச் சொற்களை அகர வரிசைபபடுத்தி அகராதியை முதலில் தொகுத்தவர்கள் ஐரோப்பாவைச் சேர்ந்த பாதிரியார்களே இபபணி 18 ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது ஆனால் தமிழில் முதன்முதல் பூரணத்துவம் பெற்ற அகராதி 'சதுரகராதியா' வாகும். இதை உருவாக்கியவரும் இத்தாலி நாட்டைச் சேர்ந்த வண பிதா பெஸ்கி என்ற வீரமாமுனிவரே.

## ஜப்பான்

ஜப்பானில் உள்ள கசியோ என்ற ஸ்தாபனத்தார் கைக் கடிகாரம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளனர், இது கட்டியிருப்பவரின் இரத்த அழுத்தத்தை அறிந்து கொள்ள உதவுகிறது, இதில் உள்ள ஒரு பொத்தானை அமுக்கினால்போதும் 30 வினாடிகளில் இரத்த அழுத்தத்தைத் துல்லியமாகத் தெரிந்து விடும்,

உலகெங்கும் இம்மாதம் 24 ஆம் திகதி விற்பனைக்கு வர உள்ள இந்தக் கடிகாரத்தின் விலை இலங்கை நாணய மதிப்பின்படி 6 ஆயிரமாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது

## பிரான்ஸ்

பிரான்ஸ் நாட்டில் இப்போது ரெலிபோன் நம்பர்களுடன் கூடிய புத்தகம் வெளியிடப்படுவதில்லை, அதற்குப் பதிலாக 'வீடியோ ரெலெக்ஸ்' என்ற அமை புமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது- இதில் சுமார் 25 மில்லியன் இணைப்புகள் உள்ளன, இதற்கு பெயரை மாத்திரம் சொன்ன அடுத்த வினாடியே ரெலிபோன் நம்பரைத் தரும் இந்த அமைப்பின் சேவையைப் பெற வசதியாக ரெலிபோனுடன் ஒரு சின்ன தட்டச்சுப் பொறியையும், சிறிய தொலைபேசித் திரையையும் இணைத்திருக்கிறார்கள், இதன் விலை புத்தகத்தின் விலை[illegible]பார்க்க மிகக் குறைவு என்றும் கூறப்படுகின்றது, (16)

# சிறிய செய்திகள்

## தெரிவுப் போட்டி

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 15 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான உதைபந்தாட்டத்தெரிவுப் போட்டி ஒன்று அடுத்த வாரம் முதல் நடைபெறவுள்ளது.

இப் போட்டி பண்டத்தரிப்புக் கோட்டத்தில் உள்ள இளவாலை சென்.ஹென்றியரசர் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மகிலாகம் மகாவித்தியாலயம், குலமங்கால் றோ. க. த. க. பாடசாலை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, வட்டு. இந்துக்கல்லூரி, இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் ஆகிய எட்டுப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெறும்

இப்போட்டிக்கான சகல நடவடிக்கைகளையும் போட்டிப் பொறுப்பாளரும் உடற்பயிற்சி ஆசிரியருமான திரு வி. முருகேசு மேற்கொண்டுள்ளார். (18)

## கலவரங்களை அடக்க சிறப்புப்படை

இந்தியாவில் சாதி இனரீதியான வகுப்புக் கலவரங்களை அடக்க சிறப்புப் படை ஒன்று உருவாக்கப்படுகிறதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 அணிகள் கொண்ட இப் படைப் பிரிவில் 13 ஆயிரம் பேர் பணிபுரிவர் ஒவ்வொரு அணியிலும் 90 பேர் கொண்ட பெண்கள் அணியும் செயற்படும்

இவர்கள் வீடுகளைச் சோதனையிடவும் போராளிகளைப் பரிசோதனைசெய்யவும் உதவுவர் எனவும் இப் படையணியினர் விசேடபயிற்சியுள் தீயணைப்புப் பயிற்சியிலும் திறமை உடையவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## யுனிசெப் திட்ட கலந்துரையாடல்

1992 ஆம் ஆண்டு யுனிசெப் உதவியுடன் யாழ் மாநகராட்சி மன்ற பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் வேலைத் திட்டங்கள் பற்றிய கலந்துரையாடல் யாழ் மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இம்மாதம் 18 ஆம் திகதிசெவ்வாய்க்கிழமை பி ப. 3.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகராட்சி மன்றப் பிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்களின் தலைவர் அல்லது செயலாளரை இக் கலந்துரையாடலில் பங்கு பற்றுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

## வைபவம்

வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகத்தின் 4 ஆவது சான்றிதழ் வழங்கும் வைபவமும் 'ஷோர்ட்ஸ் முத்தையா' தட்டச்சு வார விழாவும், நாளை கழகத் தலைவர் திரு எஸ். குலசிங்கம் தலைமையில் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

விழாவில் பிரதம விருந்தினராக யாழ் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திரு வீ எஸ், சுவாமிநாதன் கலந்து கொள்வார். (11)

## விநாயகர் சிலை பிரதிஷ்டை

கொழும்பு - பொரளை டி எஸ் சேனநாயக்கா வித்தியாலயத்தில் இந்து மாணவர்களின் வழிபாட்டுக்கென அண்மையில் விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டுள்ளது.

இ. தொ. கா. பொதுச் செயலாளரும், கைத்தொழில் ராஜாங்க அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி இதற்கான ஒழுங்கினை மேற்கொண்டிருந்தார்.

## இலங்கையர் தெரிவு

அண்மையில் சுவற்சர்லாந்தில் நடைபெற்ற உலக பில்லியட்ஸ் சமேளனத்தின் கூட்டத்தில் இவ் அமைப்பின் தலைவராக இலங்கையைச் சேர்ந்த பறூக் சஹீட் என்பவர் தெரிவு செய்யபபட்டுள்ளார்.

இவ் விளையாட்டுத் துறையில் இலங்கையர் ஒருவர் உயர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை இதுவே முதற் தடவையாகும்.

ஜப்பான், கொறியா, அவுஸ்திரேலியா, மலேசியா, இலங்கை, ரஷ்யா, இங்கிலாந்து, சுவீடன், ஜேர்மனி, இத்தாலி ஒஸறியா. நெதர்லண்ட். அமெரிக்கா ஆகிய முக்கிய நாடுகளின் பிரதிநிதிகளாக 40 அங்கத்தவர்கள் கலந்து கொண்ட உலக பில்லியட் சமேளனத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்திலே இத் தெரிவு இடம்பெற்றது (16)

## தேக்கம்

யாழ் பிரதம தபாலகத்தில் தற்காலிகமாக இயங்கும் வேலணை, புங்குடுதீவு தபாலகங்களில் பல மாணவர்களது தபால் அறிமுக அட்டைகள் தேங்கிக் கிடபபதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை பெறத் தவறியவர்கள் உடன் வந்து வேலை நாள்களில் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.


## சிறு விளம்பரம்

### கம்பியூட்டர் கல்வி

COMPUTER BASIC புதிய பிரிவு 17 - 02 - 92 லண்டன் I. D P. M: அங்கத்துவ விரிவுரையாளர்களால் ஆரம்பிக்கபபடவுள்ளது PRACTICALS GENERATOR CURRENT மூலம் பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ் SCHOOL OF BUSINESS ADMINISTRATION. 16, 3, RD CROSS STREET, JAFFNA.

02020

மலிவு விற்பனை

### "ராகுலசூரியன்ஸ்"

சிவன் கோவிலடி, பருத்தித்துறை.

எங்கள் நிறுவனத்தின் கையிருப்பைக் குறைப்பதற்காக கையிருப்பில் உள்ள சகல பிடவைவகைகளையும் மிகவும் சகாயமான விலையில் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்ய விரும்புகிறோம்.

இச் சந்தர்ப்பத்தை எமது வாடிக்கையாளர் அனைவரும் பயன்படுத்தி நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன அறிவித்துக்கொள்கிறோம்.

உரிமையாளர்
ராகுலசூரியன்ஸ்

பிரதான வீதி.
சிவன் கோவிலடி,
பருத்தித்துறை.

02027

★ காமன்வெல்த் உச்சி மாநாடு;

## ஒருங்கிணைந்த ராணுவத் தலைமை;

# அமைப்பு சாத்தியமில்லை!

ஒருங்கிணைந்த இராணுவத் தலைமை அமைப்பு குறித்துச் சுதந்திர நாடுகளின் காமன்வெல்த் உச்சிமாநாடு உடன்பாடு காணத் தவறிவிட்டது என அறிவிக்கப்படுகின்றது.

மின்ஸ் நகரில் நடைபெற்ற உச்சிமாநாட்டில் சோவியத் முப்படைகளின் வருங்காலம் குறித்து உறுப்பு நாடுகளிடையே கருத்து வேறுபாடுகள் மேலும் தீவிரமடைந்துள்ளன என்றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஒரு இடைக்கால ஏற்பாட்டிற் கூட ஒருங்கிணைந்த முப்படை அமைப்பில் சேர்வதற்கு உக்கிரெயன் உட்படச் சில குடியரசுகள் மறுத்துவிட்டன-

தமக்கென்று தனியான இராணுவம் வேண்டும் என்று மேற்படி மூன்று குடியரசுகளும் வற்புறுத்தி வருகின்றன-

ரஷ்யா உட்பட மற்ற 8 குடியரசுகளும் ஒருங்கிணைந்த படைக் கட்டுப்பாட்டை ஆதரிக்கின்றன-

## இவ்வருட முடிவுக்குள் சலுசலாவும் தனியார் மயம்

அரசுக்குச் சொந்தமான சலுசலா ஸ்தாபனம் இந்த வருடம் முடிவதற்கு முன்பு தனியார் மயமாக்கப்பட இருப்பதாக, புடவை, கைத்தறித் தொழில் அமைச்சர் யூ.பி. விஜயக்கோன் தெரிவித்துள்ளார்.

24 மொத்த, சில்லறை வியாபார நிலையங்களை உள்ளடக்கிய இந்த ஸ்தாபனத்தின் 60 வீதத்தை உள்ளூர், அல்லது வெளிநாட்டு ஸ்தாபனங்களுக்கும். 30 வீதத்தை பங்குச் சந்தைக்கும் மிகுதி 10 வீதத்தை தற்பொழுது இந்த ஸ்தாபனத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு இலவசமாகவும் பகிர்ந்து கொடுக்கத் தீர்மானித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

1991ஆம் ஆண்டு இந்த ஸ்தாபனம் 24 ஆயிரம் மில்லியன் வெளிநாட்டு செலாவணியைச் சம்பாதித்துத் தந்துள்ளது என்ற உண்மையையும் ஒப்புக்கொண்ட அமைச்சர் இந்த ஸ்தாபனம் தனியார் மயமாக்கப்படுவதினால் 1994ஆம் ஆண்டளவில் 54 ஆயிரம் மில்லியன் ரூபாக்களை பிறநாட்டு செலவாணியாகசம்பாதித்துத் தரும் என்று எதிர்பார்ப்பதாகவும் கூறியுள்ளார். (16)

## காவத்தைப் பகுதியில் கடும் கண்காணிப்பு

காவத்தைப் பகுதியில் 12 அரசாங்கத் தோட்டங்கள் பொலிஸாரின் கடும் கண்காணிப்புக்கு இலக்காகியுள்ளன என்று கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

தீவிரவாதிகள் மீதான நடவடிக்கை இது என்று பொலிஸார் கூறியுள்ளனர்,

## பாண்டிச்சேரி கூட்டத்தை தி. மு. க. பகிஷ்கரிக்கும்

காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பாக பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தின் நிலைபற்றி ஆராய புதுச்சேரியின் முதல்வர் வைத்திலிங்கத்தினால் கூட்டப்படுகின்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தையும் தி. மு. க. பகிஷ்கரிக்கப் போகிறது என்று பாண்டிச்சேரி யூனியன் பிரதேச முன்னாள் முதல்வர் டி. ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்

இதே வேளை இப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இரு மாநில அரசியல் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டுமென பொதுமக்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாக ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

தமிழக முதல்வர் கூட்டிய கூட்டத்தையும் தி.மு.க. பகிஷ்கரித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பண்டிதமணி நினைவாக உருவாகிறது அறக்கட்டளை

"இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுத்தாலும் பேச்சாலும் பாமரர்கள் தொடங்கிப் பண்டிதர்கள்வரை எல்லாரது உள்ளங்களையும் கொள்ளைகொண்ட மூதறிஞர் ஆவர். அவரது நினைவாகப் பல்கலைக்கழக மட்டத்தில் அறக்கட்டளை ஒன்றை ஏற்படுத்தல் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் அடிப்படைத் திட்டங்களில் ஒன்று இத்திட்டம் வெகு விரைவில் நிறைவு பெறத் தரித முயற்சி எடுப்பது அவசியம்"

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் கூட்டத்துக்குத் தலைமைதாங்கிப் பேசிய பண்டிதை பொன். பாக்கியம் மேற்கண்டவண்ணம் தெரிவித்தார்

வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சபையின் காரியதரிசி ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் பேசுகையில் பண்டிதமணி ஐயா அவர்கள் சம்பந்தமான பணிகள் தொடர்ந்து நடைபெறும் என்றும், அறக்கட்டளை விஷயம் விரைவில் நிறைவேற்றி வைக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபையின் தலைவராகப் பணிபுரிந்து சமீபத்தில் அமரத்துவம் அடைந்த வேலணையூர் பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளையின் அரிய சேவைகள் குறித்துப்பலகலைப்புலவர் க. சி. குலரத்தினம், ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம் திரு. சீ. க. சுப்பிரமணியம் ஆகியோர் அனுதாப உரையினை நிகழ்த்தினார்கள். அன்னவரின் ஆன்மசாந்தியின் பொருட்டு மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

## 'ஹெலஉறுமய' அங்கத்தவர் மீது கட்சித்தலைமை நடவடிக்கை!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் அமைக்கப்பட்டுள்ள 'சிங்கள தேசிய பாரம்பரிய அமைப்பு'டன் தொடர்புள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை யெடுக்கப்படவுள்ளதாக அறியப்படுகின்றது.

சுதந்திரக் கட்சித் தலைமையின் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள இந் 'ஹெல உறுமய' அமைப்பு கட்சியின் தலைமைக்கு ஓர் அச்சுறுத்தலாக உருவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

இவ் அமைப்பில் இணைந்துள்ள 43 சுதந்திரக் கட்சி உறுப்பினர்களையும் கட்சியிலிருந்து வெளியேற்றுவது குறித்து ஆராயப்படுவதாகவும் அறியப்படுகின்றது.

கட்சித் தலைமையின் அனுமதியின்றி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அன்னையர் முன்னணியை அமைக்க முடியுமென்றால். தாம் இந்த அமைப்பை உருவாக்கியதில் என்ன தவறு? என குறித்த உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனராம்.

### நடைமுறை

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பிரிவில் கடந்த (1991) ஆண்டில் தயாரிக்கப்பட்ட மூன்றாண்டு கல்வி அபிவிருத்தித் திட்டத்தை இவ் வருடத்திலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகளைப் பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். வி.மகேசவேலு மேற்கொண்டு வருகின்றார்.

## இந்தியாவில் தனது நாடியோட்டம் பார்த்த இளவரசர் சார்ள்ஸ்

இளவரசர் சார்ள்ஸுக்கு இந்திய வைத்திய முறையில் நம்பிக்கை இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது தற்போது இந்தியாவில் தங்கியிருக்கும் சார்ள்ஸ் யூனானி வைத்தியர் ஒருவரைச் சந்தித்தார் என்றும், பிரிட்டிஷ் பத்திரிகையாளர் சூழ இருந்தகால் அவரைக் கொண்டு தனது நாடி ஓட்டத்தைப் பிடித்துப் பார்ப்பதில் அவர் தயக்கம் காட்டினாரென்றும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன சார்ள்ஸுக்கு மேற்படி வைத்தியத்தில் முன்னர் ஆர்வம் இருந்ததென்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய விஜயத்தின்போது இந்தியாவைப் பிரிட்டிஷார் அரசாட்சி செய்ததும் இந்தியா துண்டாடப்பட்டதும், பலர் சிறையில் வாடியதுமான பல நினைவுகளை சார்ள்ஸ் நினைவு கூர்ந்தார் என அப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. சார்ள்ஸ், டயானா தம்பதிகள் ஆறுநாள் விஜயம் மேற்கொண்டு இந்தியா வந்துள்ளனர் என்பது தெரிந்ததே.

அபிலாஷைகள் நிறைவேறும் வகையில்

## சமஷ்டி அமைப்பு வேண்டும்

"ஸ்ரீலங்காவின் அரசியல் யாப்புக்குக் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் சமஷ்டி ஆட்சிக்குரிய சகல அம்சங்களும் உள்ளன, 'சமஷ்டி' என்ற சொல்லில் அச்சம் கொள்ளத்தேவையில்லை ஏனெனில் இந்தியாவுக்கு சமஷ்டி போதாதென்றே பலரும் அங்கு கருதுகிறார்கள். எனவே 'சமஷ்டி'' என்ற சொல்லினால் இங்கு அச்சம் கொள்ளத் தேவையில்லை. சமஷ்டி அமைப்பை தெளிந்த உணர்வுடன் நோக்க வேண்டும். இலங்கை இனப்பிரச்சினைக்குச் சமஷ்டி முறையே சிறந்த பரிகாரம்,"

இவ்வாறு இந்தியத் தூதுவர் என். என். ஜா ஐலன்ட் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் கூறியுள்ளார். இப்பேட்டியின் தொகுப்பு கீழே தரப்படுகிறது.

கே: இலங்கை இந்திய ஒப்பந்தத்தை இப்போதும் செயற்படுத்தலாம் என்று கருதுகிறீர்களா?

ப: நிச்சயமாக அதைச் செயற்படுத்துவதற்கு இன்னமும் காலம் கடந்து விடவில்லை.

கே: இந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்ட ஷரத்துகள் பல இரு பகுதியினராலும் நிறைவேற்றப்படவில்லையென்ற சூழ்நிலை தெரிகிறதே?

ப: இங்கு நிலவும் உள்நாட்டுப் பிரச்சினைகளைப் பொறுத்த அளவில் இந்த ஆவணத்தை இரு கோணங்களில் பார்க்க வேண்டும். இந்த நாட்டில் வாழும் இரு சமூகங்களும் மிகவும் நல்லவர்கள். நாட்டின் சுபிட்சத்துக்காகவும் ஒருவருக்கொருவரும் பாடுபடக் கூடியவர்கள்.

கடந்த 30 வருடங்களாக இவர்களைப் பற்றி நன்கு தெரிந்திருந்து, இப்போது இந்த நிலையைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக உள்ளது இந்த ஒப்பந்தத்தை நுணுக்கமாக ஆராயுமிடத்து இப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய வழிமுறை இருப்பதைக் காணலாம். இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எல்லாப் பிரிவினரிடமும் உண்மையான விருப்பம் இருப்பின் இந்த ஒப்பந்தத்தில் வழிமுறையைக் காணலாம். இந்தியா சிறிலங்காவுக்காக இனப்பிரச்சினை விடயத்தில் மத்தியஸ்தம் வகித்ததும் அல்லது பேச்சுவார்த்தை நடத்தியதும் வேறு விடயம். ஆனால் முக்கியம் என்னவெனில் இந்த ஒப்பந்தம் நல்ல ஒப்பந்தம், அதைச் செயற்படுத்திப் பார்க்க வேண்டும். அது இதுவரை நடைபெறவில்லை. இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 5 வருடங்கள் ஆகிறது. கடந்த கால அனுபவங்களைக் கொண்டு அரசோ அன்றி பொதுமக்களோ ஒப்பந்தம் திருத்தப்பட வேண்டுமென்றோ மாற்றப்படவேண்டுமென்றோ கருதும் பட்சத்தில் அப்படிச் செய்யலாம். அதை நீங்கள் செய்ய வேண்டும். தெரிவுக்குழுகூட இதைச் செய்யலாம் இந்த ஒப்பந்தத்தை ஏன் யாரும் எதிர்க்க வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை, ஒப்பந்தம் எப்படி உருவாகியது, யார் இதற்குப் பொறுப்பு என்பதெல்லாவற்றையும் மறந்த நிலையில் பார்க்கும்போது தீர்வுக்கு அடித்தளத்தை தோற்றுவிக்கும் ஆவணம் என்பது தெளிவாகும்.

கே: இப்போது நிலைமையில் முற்று முழுதாக மாற்றம் ஏற்பட்டுள்ளதல்லவா? எல். ரி. ரி. ஈ உடன் மட்டும் ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தை நடத்தின் அதேவேளை எல். ரி. ரி. ஈ. யை இந்தியா பயங்கரவாதிகள் எனப்பிரகடனப்படுத்தினால் இவ்விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்?

ப: தமிழர்களை யார் பிரதிநிதிப்படுத்துகிறார்கள் என்பதை இலங்கை அரசே தீர்மானிக்க வேண்டும், எங்களைப் பொறுத்த வரை ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் தீர்வு காணப்படவேண்டுமென்பதேயாகும். அதில் எவ்வித மாற்றமும் இல்லை.

இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை நான் கடந்த 18 மாதங்களாக இங்குள்ளேன். அப்படி ஒரு முயற்சி எடுக்கப்படவில்லை எல்.ரி.ரி.ஈ தமிழர்களை பிரதிநிதிப்படுத்துகிறார்களா என்பதை அரசு தீர்மானிக்கட்டும். எல்.ரி.ரி.ஈ யின் நிலைப்பாடு தாங்கள் தான் தமிழர்களின் பிரதிநிதிகள் என்பதாகவே இருக்கும். இப்பொழுது இப்பிரச்சினைத் தீர்வுக்கு வழிவகைகளை ஆராயவேண்டும். அதற்கு இலங்கை இந்திய ஒப்பந்தம், 13 ஆவது திருத்தச் சட்டமூலம் ஆகியவை உள்ளன. மக்கள் சமஷ்டி அமைப்புப் பற்றித் தெரிந்திருத்தல் வேண்டும் நான் இது பற்றி ஒரு வருடத்திற்கு முன்பும் சொன்னேன். வேறு பலரும் சொல்லியுள்ளார்கள். சமஷ்டி என்ற வார்த்தையிலேயே சிலர் அச்சம் கொள்ளுவதாகத் தெரிகிறது. அப்படி அச்சம் கொள்ளத் தேவையில்லை. இந்தியாவை எடுத்துக் கொண்டால் அங்கும் சமஷ்டி ஆட்சியே, சமஷ்டியே போதாதென கருதுகிறார்கள் சமஷ்டி பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும், ஏற்கனவே 13 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் சமஷ்டிக்கான பல அம்சங்கள் உள்ளன, எனவே அதற்கொரு சரியான உருவம் கொடுத்து நடைமுறைப்படுத்த வேண்டும், கடந்த கால நிகழ்வுகளை மறந்து தீர்வுக்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும், இம் முயற்சியில் அரசும், மக்களும் ஈடுபடவேண்டும்

கே: ஆனால் இப்போது எல்.ரி.ரி.ஈ சமஷ்டிக்கு மேலாக வல்லவா கேட்கிறது.

ப: அதுவும் நீங்களே தீர்மானிக்கவேண்டிய விடயம்,

கே: அவர்கள் கோரியவண்ணம் கொடுக்கப்படுமானால் இந்தியாவில் பிரிவினை தூண்டுதலை அல்லது எண்ணத்தைப் பலப்படுத்தாதா?,

ப: நீங்கள் மீண்டும் புலிகளைப் பற்றியே பேசுகிறீர்கள், நான் தமிழ் மக்களைப் பற்றிப் பேசுகிறேன், பெரும்பான்மையான தமிழ் மக்களுக்குப் போர் அலுத்துச் சலித்திருக்கவேண்டும், சிங்கள ம[illegible] போரினா[illegible] சலித்தும் போயிருக்கிறார்கள், அதை [illegible] பண்ணி உ[illegible]

([illegible] பார்க்க)

ஜெயலலிதா சொல்கிறார்

# கர்நாடக வன்முறையால் 1,17000 தமிழ் அகதிகள்

காவேரிப் பிரச்சினை காரணமாக கர்நாடகத்தில் ஏற்பட்ட வன்முறைகளால் ஒரு லட்சத்துப் பதினேழாயிரம் தமிழர்கள் தமிழ் நாட்டுக்குள் அகதிகளாகத் தப்பி ஓடிவந்துள்ளனர்.

இவ்வாறு தமிழகமுதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று சென்னையில் நடைபெற்ற அனைத்துக்கட்சிக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இவர்கள் தமது உடைமைகளை இழந்து வந்துள்ளனர் எனவும் அவர் மேலும் கூறினார்.

# தி. மு. க., பாட்டாளி கட்சி பகிஷ்கரித்தன

காவேரி நீர்ப்பிரச்சினை பற்றி சென்னையில் நேற்று இடம்பெற்ற அனைத்துக்கட்சிகளின் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும், பாட்டாளி மக்கள் கட்சியும் கலந்துகொள்ளவில்லை

முன்னர் இரு தடவைகள் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின்படி புதுடில்லியில் நாளை பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவேண்டுமென இதில் கலந்து கொண்ட கட்சிப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

காவேரி நீர்ப்பிரச்சினை

# உயர் மட்டக் கூட்டம்

காவேரி நீர்ப்பிரச்சினை தொடர்பான உயர்மட்டக் கூட்டம் நாளை புதுடில்லியில் பிரதமர் நரசிம்மராவ் தலைமையில் நடைபெறவுள்ளது.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா. கர்நாடக முதலமைச்சர் எஸ். பங்காரப்பா இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதற்கு முன்னோடியாக கர்நாடகத்தின் தலைநகர் பங்களூரில் முதலமைச்சர் பங்காரப்பா தலைமையிலான சர்வகட்சிக் கூட்டமும், சென்னையில் முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான சர்வகட்சிக் கூட்டமும் நடைபெற்றன.

# முன்னாள் சோவியத் விமானிகள், ஊழியர்கள் ரஷ்யா திரும்பினர்

உக்கிரெய்னில் இருந்த முன்னாள் சோவியத் போர் விமானிகள் ஆறு பேரும் அவர்களின் ஊழியர்களும் விமானங்களை எடுத்துக் கொண்டு உக்கிரெய்னை விட்டு வெளியேறி ரஷ்யாவுக்குச் சென்றுள்ளனர்.

உக்கிரெய்னில் தங்கியிருந்து புதிய உக்கிரெய்ன் குடியரசுக்கு விசுவாசம் தெரிவித்தும் பதவிப் பிரமாணம் மேற்கொள்ளதி தாம் விரும்பவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

உக்கிரெய்ன் அரசாங்கத்தின் உத்தரவுகளை மீறி விமானங்களுடன் புறப்பட்ட இவர்கள் ரஷ்ய எல்லைக்குள் இருக்கும் இராணுவ விமானத்தளத்துக்குள் இறங்கி இருக்கிறார்கள்.

ஊரடங்குச் சட்டத்தால்

# பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்கும் வேலைகள் பாதிப்பு

யாழ் குடாநாட்டில் ஊரடங்குச்சட்டம் அமுல்செய்யப்பட்டதால் பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்கள் இறக்கும் வேலைகள் நேற்று நடைபெறவில்லை.

ஊரடங்குச் சட்டம் செவ்வாய்க்கிழமைக்குப் பின்னர் மேலும் தொடருமானால் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்று பொருள்கள் இறக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (47)

# 50 பெரல்கள் குண்டுகள் சீனன்குடாவில் வெடித்தன

சீனன் குடா விமானத்தளத்தில் ஒரே தடவையாக 50 பெரல்கள் குண்டுகள் வெடித்ததாலேயே சேதங்கள் அதிகரித்துள்ளதாக சிங்கள பி பி ஸி தெரிவித்தது.

அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவின் குண்டு வெடிப்பின்போது 50 கிலோ குண்டே வெடித்தது எனவும் பி.பி ஸி மேலும் தெரிவித்தது.

சமஷ்டி அமைப்பு

தியளிக்க வேண்டும். தமிழ்மக்கள் தாம் வாழும் இடத்தை தாயகம் என்கிறார்கள் (HOMELAND) எப்படியும் அழைக்கட்டும், அபிலாஷைகள் என்றும் கூறுகிறார்கள். வெவ்வேறு வகையில் அழைக்கிறார்கள். அவர்களது அபிலாஷைகள் நிறைவேறும் வண்ணமும் அதிகாரங்கள் உத்தரவாதப்படுத்தப்பட்டு சமஷ்டி அமைப்பை உருவாக்க வேண்டும், இதற்கும் மேலாகச் சிறந்த வழிகள் இருக்கலாம். ஆனால் சமஷ்டி அமைப்பில் அதிகாரங்கள் உத்தரவாதப்படுத்தப்பட்டு உருவாக்க வேண்டும். இப்படிக் கூறுவதானால் நான் கூட்டாட்சியைப் பற்றிக் கூறுவதாகக் கருதக்கூடாது, 1983 இல் இத் திட்டத்தையே ஜி பார்த்தசாரதி இங்கு கொண்டுவந்தார், அதை நீங்கள் கவனமாக, தெளிவாக ஆராய்ந்தீர்களானால் இந்தியாவின் நடைமுறையில் இருக்கும் சமஷ்டி அமைப்பையே காணமுடியும்

★ அம்பாறையில் அமைச்சர் தகவல்:

# நிவாரணம்வழங்கலில் மோசடி சில உ.அ. அதிபர்கள் உடந்தை

''அகதிகளுக்கான நிவாரணப் பொருள் வழங்கல் மோசடிக்குச் சில உதவி அரசாங்க அதிபர்களும் உடந்தையாக உள்ளனர்,''

இவ்வாறு பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பெஸ்டல் பெரேரா அம்பாறையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றின்போது கூறினார்.

''இத்தகைய போலி விண்ணபங்களில் கையெழுத்திடும் உதவி அரசாங்க அதிபர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்'' என்றும் அவர் எச்சரித்தார்

சில உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அகதிகளாக இல்லாதவர்கள் நிவாரணப் பொருள்கள் பெற்றதாகப் புகார்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கொழும்பில் சவூதி தூதரகம்

சவூதி அரேபியாவின் தூதரகம் ஒன்று கொழும்பில் விரைவில் அமைக்கப்படவுள்ளது.

சபாநாயகர் எம் எச். மொஹமட்டிற்கும் சவூதி அரேபியப்பிரதி வெளியுறவு அமைச்சர் அப்துல் அஸீஸுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போதே இத்தகவல் வெளியிடப்பட்டது.

# குடாநாடு வழமைபோல

நேற்று யாழ்குடா நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தும் சந்தைகள் வர்த்தக ஸ்தாபனங்கள், அலுவலகங்கள் என்பன வழமை போல் இயங்கின.

வழமை போல மக்கள் நடமாட்டம் வீதிகளில் காணப்பட்டது. 06

# ஹேமா பிரேமதாஸ ஜெனிவா பயணம்

ஜெனிவாவில் இம்மாதம் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் நடைபெறும் மாநாடு ஒன்றில் ஜனாதிபதி பிரேமதாஸவின் பாரியார் ஹேமா பிரேமதாஸ கலந்துகொள்ளவுள்ளார்.

இம்மாநாட்டில் சில நாட்டுத் தலைவர்களின் மனைவிமாரும் கலந்து கொள்கின்றனர்.

# பதுளையில் 15இராணுவம்பலி

பதுளை மாவட்டத்தில் படையினரும் விடுதலைப்புலிகளும் மோதியதாகவும் அதில் 15 படையினர் உயிரிழந்ததாகவும் சிங்கள பி. பி. ஸி தெரிவித்தது

# வீரச்சாவு

நேற்று அதிகாலை பலாலி-கட்டுவன் இராணுவ முகாமிலிருந்து முன்னேறிய படையுடன் இடம் பெற்ற நேரடி மோதலில் முத்தரசன் சுந்தரலிங்கம் சுரேஸ்குமார் (காரைநகர்) என்ற போராளி வீரச்சாவை எய்தினார். 07

# இன்று சைவசமயபரீட்சை

யாழ் சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் சிவராத்திரியை முன்னிட்டு நடத்தும் சைவசமய பாடபரீட்சை இன்றுஞாயிற்றுக்கிழமை நாவலர் மகாவித்தியாலயம், தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி ஆகிய பரீட்சை நிலையங்களில்நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையில், பரிசு பெறும் மாணவர்களுக்கு மகா சிவராத்திரியன்று பரிசுகள் வழங்கப்படுமென பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர் திரு. வ. கந்தசாமி தெரிவித்தார், 18

# செஞ்சிலுவைச் சங்க மூலம் முத்திரைகள் விற்பனை

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கிளையில் தபால் முத்திரைகள் கட்டுப்பாட்டு விலையில் விற்கப்பட்டு வருகின்றன,

இதேபோல செஞ்சிலுவைச் சங்க ஏனைய பிரிவுக் கிளைகள் மூலமும் முத்திரைகள் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனால் குடா நாட்டில் ஏற்பட்டுள்ள முத்திரைத் தட்டுப்பாடு ஓரளவு நீங்கியுள்ளதாகவும், தனியார் கடைகளிலும் முத்திரைகளின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. 06

வவுனியா நகர

# எல்லைக் கிராமங்களில் சிங்களக் குடியேற்றங்கள்

வவுனியா நகர எல்லைப் பகுதிகளில் உள்ள தமிழ்க் கிராமங்களில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்துள்ளது

இங்குள்ள இரு கிராமங்களில் வாழ்ந்த தமிழர் வெளியேற்றப்பட்டதையடுத்து ஜனவரி மாதம்முதல் சிங்களக் குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன

சிங்கள பி. பி. ஸி தகவல

# சீனன்குடா குண்டு வெடிப்பில் 100 கோடி ரூபா நட்டம்

சீனன்குடா விமானப்படைத்தளத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் 30படையினர் வரை உயிரிழந்ததாக சிங்கள பி. பி ஸி தெரிவித்தது

100பேருக்கு மேற்பட்ட படையினர் இச்சம்பவத்தின் போது படுகாயமடைந்ததாகவும் பி. பி. ஸி தெரிவித்தது

2-வது உலக யுத்தகாலத்தின் கொங்கிரீட்டிலான ஒன்பது பாரிய கட்டிடங்களும் இதில் தரைமட்டமான தாகவும் இவை உடைக்க முடியாதவாறு கட்டப்பட்டதாகவும் பி பி. ஸி குறிப்பிட்டது.

நூறு கோடி ரூபாவரை இச்சம்பவத்தால் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தது

விமானங்களும், ஹெலிக்கப்டர்களும் சேர்ந்து ஒன்பது சேதமானதாகவும் இவற்றின் நட்டம் 50கோடி ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டது

# மேதினக் கூட்டம்

சமசமாஜக்கட்சி கம்யூனிஸ்ட் கட்சியும் ஒன்றாகச் சேர்ந்து எதிர்வரும் மேதினத்தை நடத்தவுள்ளது,

இவர்களுடன் தொழிற்சங்க சம்மேளனங்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் சேரவுள்ளன,

இதேவேளை லலித், காமினி குழுவினர் இவர்களுடன் சேர்வது பற்றி இன்னும் அறிவிக்கவில்லை,

# ஊரடங்குச் சட்டத்திலும் எழுதுவினைஞர் பரீட்சை

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த போதும் எதுவித பிரச்சினைகளுமின்றி இலங்கை எழுதுவினைஞர் ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை நேற்று யாழ் நகரில் நடைபெற்றது.

இப்போட்டிப் பரீட்சைக்கு சுமார் 3200 பரீட்சார்த்திகள் தோற்றியதாகவும் 16 பரீட்சை மண்டபங்களில நடைபெற்றதாகவும் கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பரீட்சையின் விடைத்தாள்கள் இன்று அல்லது நாளை கொழும்புக்கு கப்பலில் எடுத்துச் செல்லப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 47 06

# நிலுவைப் பணம் செலுத்த சலுகை

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் வீடமைப்புத் திட்டங்களில் உள்ள ஒதுக்கீட்டாளர்கள் வாடகை நிலுவைப்பணத்தை இவ்வாண்டு ஆனி மாதத்துக்கு முன்பு செலுத்துமிடத்து தண்டப்பணங்களைச் செலுத்த வேண்டியதில்லை.

இதேபோன்று வீடமைப்புக் கடன்களை பெற்றவர்கள் கடன் தவணைப்பண நிலுவைகளையும் ஆனி மாதத்துக்கு முன்செலுத்துமிடத்து தண்டப்பணம் செலுத்த வேண்டியதில்லை.

இச்சலுகைகள் 30 06 92 திற்கு பின் வழங்கப்படமாட்டாது என மாவட்ட முகாமையாளர் தெரிவிக்கின்றார் 06

பொதுமக்கள்

லிங்கம் சுரேஸ்குமார்) புகழுடம்பு யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் உள்ள ஐந்து சந்தியிலுள்ள வீட்டில் நண்பகல் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

மானிப்பாய் வீதியூடாக ஆறுகால்மடம் வைத்திலிங்கம் பாடசாலைக்கு பொதுமக்களின் அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு மாலை 5 30 மணிக்கு கோப்பாய் மாவீரர் துயிலும் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (07)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் [illegible] கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்'கில் [illegible] அச்சகத்தில் [illegible] 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது